**மாதிரி வினாத்தாள் - 2021 - 22**

**SAMPLE QUESTION PAPER -2021 -22**

**வகுப்பு: பன்னிரண்டு** **மொத்த மதிப்பெண்கள்:40**

**(XII-STD) 106** **Maximum marks : 40**

**தமிழ்** **கால அளவு : 90 நிமிடம்**

**TAMIL** **பருவம் -1** **Time Allowed :90 Minuts**

---

**குறிப்பு : இவ்வினாத்தாளில் 50 வினாக்கள் உள்ளன.**

**40 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்**

**அனைத்து வினாக்களும் ஒரு மதிப்பெண்ணைத் தாங்கியன.**

---

## பகுதி -அ ( Section-A)

## படித்தல்( Reading comprehension)

I. பின்வரும் உரைநடைப் பகுதியைத் தொடர்ந்து வரும் பலவுள் தெரிவு வினாக்களுக்கு உரிய விடைகளை எழுது 4x1=4

விக்டோரியா அருவி ஆப்பிரிக்காவில் சாம்பியா நாட்டிற்கும் ஜிம்பாப்வே நாட்டிற்குமான ஓர் எல்லையில் அமைந்துள்ளது. உலகின் ஏழு இயற்கை அதிசயங்களில் ஒன்றான இந்த அருவி யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரிய சின்னங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது. விக்டோரியா அருவி உலகின் மிகப் பெரிய அருவி. 1,708 மீட்டர் நீளமும், 108 மீட்டர் ஆழமும் கொண்டு சாம்பசி நதியின் போக்கில் அமைந்துள்ள இந்த அருவியில் நிமிடத்திற்கு 5,50,000 கன மீட்டர் தண்ணீர் வந்து விழுகிறது.

அருவியில் இருந்து விழும் நீர் தெறிப்புகள் 400 மீட்டர் உயரம்வரையும்,சில சமயம் இதைப் போல் இரண்டு மடங்கு உயரம் வரையும் மேல் எழுகின்றன. பனிமூட்டம் போன்ற இந்தக் காட்சியை 50 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து காணமுடியும். இந்த அருவியின் உள்ளூர் பெயர் மோசி–ஓவா துன்யா. ”புகையும் இடியும்” என்பது இதன் பொருள். 1855-ஆம் ஆண்டு நவம்பர் 17-ஆம் நாள் டேவிட் லிவிங்ஸ்டோன் என்ற ஆங்கிலேயர் இந்த அருவியை முதன் முதலில் பார்த்தார். இவரே இந்த

அருவிக்கு விக்டோரியா அருவி எனப் பெயர் சூட்டினார். விக்டோரியா அருவி தொடர்ச்சியான அருவியாக இல்லாமல் பல அருவிகளாகப் பிரிந்து கொட்டுகிறது. இது ஐந்து அருவிகளாகப் பிரிந்து கொட்டுகிறது. இவற்றில் பேயருவி, முதன்மை அருவி, வானவில் அருவி, குதிரைக்

குளம்பு அருவி, ஆகியன ஜிம்பாப்வேயில் அமைந்துள்ளன. கிழக்கு அருவி மட்டும் சாம்பியாவில் அமைந்துள்ளது.

இந்த அழகு அருவியும் அதைச் சுற்றிலும் உள்ள இயற்கை எழிலும் தாவர விலங்குகளும் இவ்விடத்தை மிகச்சிறந்த சுற்றுலா தலமாக்கியுள்ளன. ஆண்டுக்கு ஒரு மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வதாக ஒரு புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. இந்த அருவியை ஹெலிக்காப்டர் மூலம் சுற்றிப்பறந்து பார்வையிடும் அனுபவம் மெய்சிலிர்க்க வைக்கக்கூடியது. படகுகள் மூலம் அருவிக்கு அருகே செல்லவும் வசதிகள் உள்ளன. எனினும் இப்பகுதியின் சுற்றுலா வளர்ச்சி சுற்றுச்சூழலுக்கு ஆபத்தாக முடியும் எனச் சூழலியலாளர்கள் எச்சரிக்கின்றனர்.

<u>வினாக்கள்</u>

1. மோசி-ஓவா-துன்யா என்பதன் பொருள் என்ன?

   அ) இடியும், மழையும் ஆ) மழையும், மின்னலும்

   இ) இடியும், மின்னலும் ஈ)புகையும், இடியும்

2. கிழக்கு அருவி அமைந்துள்ள இடம் எது?

   அ)ஜிம்பாப்வே ஆ)மலேசியா இ)சாம்பியா ஈ)இந்தியா

3. விக்டோரியா அருவியில் நிமிடத்திற்கு வந்து விழும் தண்ணீரின் அளவு என்ன?

   அ)5,50,000 கன மீட்டர் ஆ) 5,55,000 கன மீட்டர்

   இ)6,50,000 கன மீட்டர் ஈ) 6,55,000 கன மீட்டர்

4. சுற்றுச்சூழலுக்கு ஆபத்தாக முடிவது எது?

   அ) தொழில் வளர்ச்சி ஆ)சுற்றுலா வளர்ச்சி

   இ)அறிவியல் வளர்ச்சி ஈ)தொழில் நுட்ப வளர்ச்சி

II. <u>பின்வரும் உரைநடைப் பகுதியைத் தொடர்ந்து வரும் பலவுள் தெரிவு வினாக்களுக்கு உரிய விடைகளை எழுது</u> 4x1=4

டெங்குவாக இருந்தாலும் சரி அல்லது சாதாரணக் காய்ச்சலாக இருந்தாலும் சரி, முதல் நடவடிக்கையாக நிலவேம்புக் குடிநீரை எடுத்துக்கொள்ளலாம்.ஒரு வயதுக்குக் கீழ் உள்ள குழந்தைகளுக்கு நிலவேம்புக் குடிநீர் கொடுக்கக் கூடாது. 3 முதல் 12 வயதுவரை உள்ள

குழந்தைகளுக்கு 15 மி.லி. முதல் 30 மி.லி.வரை மருத்துவர் அறிவுரையின்படி கொடுக்கலாம். பெரியவர்கள் 60 மி.லி. வரை எடுத்துக்கொள்ளலாம். காலை மாலை என இரு வேளையும், தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இது பக்கவிளைவுகள் அற்றது.நிலவேம்புக் குடிநீர் எடுத்துக்கொண்ட முதல் மூன்று நாட்களுக்குப் பிறகும் காய்ச்சல், உடல் சோர்வு, உடல் வலி போன்றவை இருந்தால், உடனடியாக அருகிலுள்ள அரசு, தனியார் மருத்துவமனைக்குச் சென்று பரிசோதிக்கவும்

பொதுவாக, டெங்குவை பித்த சுரம் என்று சித்த மருத்துவர்கள் அழைக்கிறார்கள். இந்த நோய்க்குக் கசப்பும் குளிர்ச்சியுமே மருந்து. எனவே, இனிப்பு வகைகளை எடுத்துக்கொள்ளக் கூடாது. பாகற்காயை அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும். குறுமிளகை அதிகம் பயன்படுத்த வேண்டும். எண்ணெய் உணவுப் பொருட்களைத் தவிர்க்க வேண்டும். மீன் தவிர, இதர அசைவ உணவு வகைகளைத் தவிர்க்க வேண்டும்.பப்பாளியில் ரத்தத் தட்டு அணுக்களை அதிகரிக்கும் மருத்துவக் குணங்கள் இருப்பதால், அதைப் பழச்சாறாக எடுத்துக்கொள்ளலாம். தினமும் இரண்டு முதல் மூன்று லிட்டர் தண்ணீர் குடிக்க வேண்டும்.

<u>வினாக்கள்</u>

5. டெங்குவை சித்த மருத்துவர்கள் எவ்வாறு அழைக்கிறார்கள்?
   அ) சித்த சுரம் ஆ) கப சுரம் இ) பித்த சுரம் ஈ) சாதாரண காய்ச்சல்
6. எந்த வயதுக்குக் கீழ் உள்ள குழந்தைகளுக்கு நிலவேம்புக் குடிநீர் கொடுக்கக் கூடாது?
   அ) 3 வயதுக்குக் கீழ் ஆ) 2 வயதுக்குக் கீழ்
   இ) 1 வயதுக்குக் கீழ் ஈ) 4 வயதுக்குக் கீழ்
7. பெரியவர்கள் எவ்வளவு மி.லி. வரை எடுத்துக்கொள்ளலாம்.?
   அ) 15 மி.லி. வரை ஆ) 60 மி.லி.வரை
   இ) 30 மி.லி.வரை ஈ) 40 மி.லி.வரை
8. டெங்குக் காய்ச்சல் வந்தவர்கள் உண்ணவேண்டிய பழம் எது ?
   அ} ஆப்பிள் ஆ) கொய்யா இ) அன்னாசி ஈ) பப்பாளி

## பகுதி ஆ ( Section-B )

## இலக்கணப்பகுதி ( Grammar)

III. **பிழை நீக்கித் திருத்தப்பட்ட தொடர் எதுவெனக் கண்டறிந்து எழுதுக (எவையேனும் நான்கு மட்டும்)** 4x1=4

9. நாமே ஆற்றிக்கொல்லாத துண்பத்தை நாள் ஆற்றிவிடும்.

அ) நாமே ஆற்றிக்கொள்ளாத துண்பத்தை நாள் ஆற்றிவிடும்.
ஆ) நாமே ஆற்றிக்கொள்ளாத துன்பத்தை நாள் ஆற்றிவிடும்.
இ) நாமே ஆற்றிக்கொல்லாத துன்பத்தை நாள் ஆற்றிவிடும்.
ஈ) நாமே ஆற்றிக்கொள்ளாத துன்பத்தை நால் ஆற்றிவிடும்.

10. அழுகின்ற குளந்தைக்கு வாலைப்பழம் காட்டி நிறுத்தினான்
அ) அழுகின்ற குழந்தைக்கு வாழைப்பழம் காட்டி நிறுத்தினான்
ஆ) அழுகின்ற குழந்தைக்கு வாலைப்பழம் காட்டி நிறுத்தினான்
இ) அழுகின்ற குளந்தைக்கு வாலைப்பழம் காட்டி நிருத்தினான்
ஈ) அழுகின்ற குளந்தைக்கு வாழைப்பழம் காட்டி நிருத்தினான்

11. கங்கையில் முளுகினாலும் காக்கை அண்ணமாகுமா?

அ) கங்கையில் முளுகினாலும் காக்கை அன்னமாகுமா?
ஆ) கங்கையில் முலுகினாலும் காக்கை அண்ணமாகுமா?
இ) கங்கையில் முழுகினாலும் காக்கை அன்னமாகுமா?
ஈ ) கங்கையில் முழுகினாலும் காக்கை அண்ணமாகுமா?

12. வயலில் கலை பறிப்பது உழவனுக்குக் கைவந்த களை.

அ) வயலில் களை பறிப்பது உழவனுக்குக் கைவந்த களை.
ஆ) வயலில் கலை பறிப்பது உழவனுக்குக் கைவந்த கழை
இ ) வயலில் கலை பறிப்பது உழவனுக்குக் கைவந்த களை.
ஈ) வயலில் களை பறிப்பது உழவனுக்குக் கைவந்த கலை.

13. வழிந்து பிறமொளியில் பேசுதள் தாய்மொழிப் பற்றின்மை ஆகும்

அ) வளிந்து பிறமொயிழில் பேசுதல் தாய்மொழிப் பற்றின்மை ஆகும்
ஆ) வலிந்து பிறமொழியில் பேசுதல் தாய்மொழிப் பற்றின்மை ஆகும்

இ) வழிந்து பிறமொழியில் பேசுதல் தாய்மொழிப் பற்றின்மை ஆகும்

14. பொருள் உனர்வுக்கு ஏர்ப சேர்த்தும் பிறித்தும் படிக்கவும்.

அ) பொருள் உணர்வுக்கு ஏர்ப சேர்த்தும் பிறித்தும் படிக்கவும்.
ஆ) பொருள் உணர்வுக்கு ஏற்ப சேர்த்தும் பிறித்தும் படிக்கவும்.
இ) பொருள் உணர்வுக்கு ஏர்ப சேர்த்தும் பிரித்தும் படிக்கவும்.
ஈ) பொருள் உணர்வுக்கு ஏற்ப சேர்த்தும் பிரித்தும் படிக்கவும்

IV. **<u>வல்லின மெய்யிட்டுத் திருத்திய தொடர் எதுவெனக் கண்டறிந்து எழுதுக. (எவையேனும் நான்கு மட்டும்)</u>**

4x1=4

15. தரிசு நிலங்களுக்கு பயன் மரங்களை பரிசாய் தருவோம்

அ)தரிசு நிலங்களுக்கு பயன் மரங்களைப் பரிசாய் தருவோம்
ஆ)தரிசு நிலங்களுக்குப் பயன் மரங்களைப் பரிசாய்த் தருவோம்
இ)தரிசு நிலங்களுக்குப் பயன் மரங்களை பரிசாய்த் தருவோம்
ஈ)தரிசு நிலங்களுக்கு பயன் மரங்களைப் பரிசாய் தருவோம்

16. வெந்தய செடிகளின் மேல் மின்னிடும் தங்க பூக்கள்

அ)வெந்தய செடிகளின் மேல் மின்னிடும் தங்க பூக்கள்
ஆ)வெந்தயம் செடிகளின் மேல் மின்னிடும் தங்க பூக்கள்
இ)வெந்தயச் செடிகளின் மேல் மின்னிடும் தங்கப் பூக்கள்
ஈ)வெந்தய செடிகளின் மேல் மின்னிடும் தங்கப் பூக்கள்

17. திருகோயில் நந்தவனத்திற்கு கோதை பூபறிக்க சென்றாள்

அ) திருகோயில் நந்தவனத்திற்கு கோதைப் பூபறிக்கச் சென்றாள்
ஆ) திருக்கோயில் நந்தவனத்திற்கு கோதை பூப்பறிக்க சென்றாள்
இ) திருகோயில் நந்தவனத்திற்குக் கோதை பூப்பறிக்க சென்றாள்
ஈ) திருக்கோயில் நந்தவனத்திற்குக் கோதை பூப்பறிக்கச் சென்றாள்

18. எனக்கு தமிழாசிரியர் பத்துபாட்டு எட்டுதொகை கற்று தந்தார்

அ) எனக்கு தமிழாசிரியர் பத்துபாட்டு எட்டுதொகை கற்று தந்தார்

ஆ) எனக்குத் தமிழாசிரியர் பத்துப்பாட்டு எட்டுத்தொகை கற்றுத் தந்தார்

இ) எனக்கு தமிழாசிரியர் பத்துப்பாட்டு எட்டுத்தொகை கற்று தந்தார்

ஈ) எனக்குத் தமிழாசிரியர் பத்துபாட்டு எட்டுதொகை கற்றுத் தந்தார்

19. நிலவை பிடித்து சில கறைகள் துடைத்துக் குறுமுறுவல் பதித்த முகம்

அ) நிலவைப் பிடித்து சில கறைகள் துடைத்துக் குறுமுறுவல் பதித்த முகம்

ஆ) நிலவைப் பிடித்துச் சில கறைகள் துடைத்துக் குறுமுறுவல் பதித்த முகம்

இ) நிலவை பிடித்துச் சிலக் கறைகள் துடைத்துக் குறுமுறுவல் பதித்த முகம்

ஈ) நிலவை பிடித்து சில கறைகள் துடைத்துக் குறுமுறுவல் பதித்த முகம்

.

20. அறியா பிள்ளை செய்த பிழையால் தீராதுன்பம் அடைந்தான்

அ) அறியாப் பிள்ளை செய்த பிழையால் தீராத்துன்பம் அடைந்தான்

ஆ) அறியாப் பிள்ளைச் செய்த பிழையால் தீராதுன்பம் அடைந்தான்

இ) அறியாப் பிள்ளை செய்தப் பிழையால் தீராதுன்பம் அடைந்தான்

ஈ) அறியா பிள்ளை செய்தப் பிழையால் தீராத்துன்பம் அடைந்தான்

V. **<u>பின்வரும் இலக்கணப் பொருண்மைகளுக்கு எடுத்துக்காட்டு எழுதுக (எவையேனும் நான்கு மட்டும்)</u>** 4x1=4

21. செய்தி வாக்கியம்

அ) விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை.

ஆ) தமிழ் தொன்மையான மொழி

இ) ஐயோ ! எனில் யான் புலி அஞ்சுவனே

ஈ) சோற்றுக்கா உன் உடம்பு ?

22. கலவை வாக்கியம்

அ) இளங்கோவடிகள் சிறந்த கவிஞர்.

ஆ) இளங்கோவடிகள் சிறந்த கவிஞர்; சேரநாட்டைச் சேர்ந்தவர்; ஒருமைப்பாட்டை பேசியவர்.
இ) இளங்கோவடிகள் சேரநாட்டில் பிறந்த போதும் ஒருமைப்பாடு பற்றி பேசினார்.
ஈ) இளங்கோவடிகள் ஒருமைப்பாடு பற்றி பேசியவர்
.

23. தன் வினைத்தொடர்
அ) தேன்மொழி நன்றாகக் கற்றாள்
ஆ) தேன்மொழி நன்றாகக் கற்பித்தாள்.
இ) மக்கள் தலைவர்களால் பாராட்டப்பட்டனர்.
ஈ) பாவை உணவு உண்பித்தாள்

24. செயப்பாட்டுவினைத்தொடர்

அ) கம்பன் படைத்த காவியம் சுவைமிக்கது
ஆ) திருக்குறளில் வாழ்க்கை உண்மைகள் பலஉள்ளன, .
இ) மணிமேகலை சாத்தனாரால் படைக்கப்பட்டது.
ஈ) திருக்குறளில் இல்லாதது எதுவும் இல்லை

25. பிறவினைத்தொடர்'

அ)மிளகுநீர் சாத்தமுது எனப்படுகிறது
ஆ)சிதம்பரம் திருச்சிற்றம்பலம் என்று பண்டு அழைக்கப்பட்டது.
இ) எனக்குத் தொழில் கவிதை
ஈ) கற்பித்தல் ஆசிரியர் தொழில்

26. தொடர் வாக்கியம்

அ) நெல்லிக்காய்,தான்றிக்காய்,கடுக்காய் சேர்ந்தது திரிபலை.
ஆ) வானம் மின்னியது; இடி இடித்தது; மழை பெய்தது.
இ) மழை பெய்ததால் பயிர் விளைந்தது.
ஈ) யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே.

## பகுதி-இ ( Section- C)

## இலக்கியம் (Literature)

VI. **<u>பின்வரும் செய்யுளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும்பலவுள் தெரிவு வினாக்களுக்கு விடையளி</u>:** 5x1=5

"ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் -ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னேர் இலாத தமிழ் ."

**வினாக்கள்**

27. இச்செய்யுள் இடம்பெற்ற நூல் எது ?
அ)புறநானூறு , ஆ)நெடுநல்வாடை .
இ) அகநானூறு . ஈ) தண்டியலங்காரம்,.

28. இந்நூல் எவ்வகை இலக்கணத்தைக் கூறுகிறது ?
அ) சொல் ஆ)பொருள் இ) யாப்பு ஈ)அணி

29. இச்செய்யுளில் இடம்பெற்ற அணி யாது?
அ) உவமையணி ஆ) ஏகதேச உருவகம்
இ) பொருள் வேற்றுமையணி ஈ) எடுத்துக்காட்டு உவமை

30. இப்பாடலில் ஒப்புமை செய்யப்பட்டவை ?
அ) தமிழும் சக்கரமும் ஆ) தமிழும் கதிரவனும்
இ) தமிழும் கடலும் ,ஈ) ,தமிழும் சங்கும்

31. இச்செய்யுள் எப்பாவகையால் எழுதப்பட்டுள்ளது ?
அ) இன்னிசை வெண்பா ஆ) சிந்தியல் வெண்பா
இ)நேரிசை வெண்பா ஈ) அளவியல் வெண்பா

.

VII. **பின்வரும்உரைநடைப் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் பலவுள் தெரிவு வினாக்களுக்கு விடையளி:** **5×1=5**

ஐக்கிய நாடுகள் அவை 1992ஆம் ஆண்டு ரியோ டி ஜெனிரோவில் காலநிலை மாற்றம் பற்றிய பணித் திட்ட பேரவையை உருவாக்கியது. இந்த அமைப்பில் தொடக்கத்தில் 50 நாடுகள் உறுப்பினர்களாக இருந்தன பின்னர் இந்த எண்ணிக்கை 193 நாடுகளாக உயர்ந்தது .ஒவ்வொரு ஆண்டும் பசுமைக்குடில் வாயுக்களை கட்டுப்படுத்துவது குறித்த உரையாடல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வாயுக்களை தொடர்ந்து வெளியேற்றும் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ள நாடுகளைக் கணக்கெடுத்தால் சீனா, அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் ஆகிய நாடுகள் முன்னணியில் உள்ளன. இந்தப் பட்டியலில் இந்தியாவும்

உள்ளது. புவி வெப்பமயமாதலால் ஏற்படும் கேடுகள் நம் எதிர்கால வாழ்வையும் வரும் தலைமுறையையும் அச்சுறுத்துவதாக இருக்கும்.

இந்திய வானிலை ஆய்வுத் துறையினர் 2009ஆம் ஆண்டைக் கடந்த 10 ஆண்டுகளில் மிகவும் வெப்பமான ஆண்டாக அறிவித்தனர். 2001-ஆம் ஆண்டுக்குப் பிறகு புவியின் வெப்பம் ஆண்டிற்கு ஆண்டு உயர்ந்து கொண்டே போகிறது இவ்வாறு உயர்ந்து கொண்டே போனால் அடுத்த 50 ஆண்டுகளில் கடல் நீர்மட்டம் உயர்ந்து உலகத்தில் 200 கோடி மக்கள் வெள்ளத்தால் சூழப்படுவர் என்று எச்சரிக்கை விடப்பட்டுள்ளது புவி வெப்பமயமாதல் காரணமாக உலகின் இயற்கைச் சமநிலை பாதிக்கப்பட்டுள்ளது.

**<u>வினாக்கள்</u>**

32..ஐக்கிய நாடுகள் அவை 1992ஆம் ஆண்டு உருவாக்கிய ரியோ டி ஜெனிரோ பேரவையின் நோக்கம்

அ) வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவது

ஆ)புவி வெப்பத்தைக் கட்டுப்படுத்துவது

இ) பசுமைக்குடில் வாயுக்களைக் கட்டுப்படுத்துவது

ஈ) கடலைப் பாதுகாப்பது

33..கடந்த சில ஆண்டுகளில் மிகவும் வெப்பமான ஆண்டு எது?

அ) 2002 ஆ) 2010 இ) 2009 ஈ) 2008

34. காலநிலை மாற்ற அமைப்பில் தொடக்கத்தில் எத்தனை நாடுகள் உறுப்பினர்களாக இருந்தன?

அ) 50 நாடுகள் ஆ) 193 நாடுகள்

இ) 60 நாடுகள் ஈ) 93நாடுகள்

35. பசுமைக்குடில் வாயுக்களை வெளியேற்றுவதில் முன்னணியில் உள்ள நாடுகள் யாவை?

அ) சீனா, அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான்

ஆ) சீனா, அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான்,இந்தியா

இ) சீனா, அமெரிக்கா, ரஷ்யா, ஜெர்மனி

ஈ) சீனா, அமெரிக்கா, ரஷ்யா,நார்வே

36. புவி வெப்பமயமாதல் காரணமாக எது பாதிக்கப்பட்டுள்ளது.?

அ) கடல் நீர்மட்டம்

அ) உலகின் இயற்கைச் சமநிலை

இ) மனித உயிர்கள்

ஈ) உலகின் தட்ப வெப்பம்

VIII. **பின்வரும் பலவுள் தெரிவுசெய் ( உரைநடை) வினாக்களுக்கு விடையளி.**
**(எவையேனும் ஐந்து மட்டும்)** 5x1=5

37. கவிதையின் இயங்கு ஆற்றலாக இருப்பது எது

அ)அதன் நடை ஆ)அதன் வடிவம்
இ) அதன் கருத்து ஈ)அதன் கற்பனை

38. தொகை மொழி வாக்கிய அமைப்பில் -------------- போலவே நடைபெறும்
அ) ஒரு சொல் ஆ)ஒரு தொடர்
இ) ஒரு தொகை ஈ)ஒரு வாக்கியம்

39. கவிதை மறுதலை தொடர் என்பது

அ) எழுவாய் + செயப்படுபொருள்+ பயனிலை என்று வருவது
ஆ) எழுவாய் முன்னால் வருவது
இ) இயல்பு வழக்கில் வருவது
ஈ) இயல்பு வழக்கில் இருந்து பிறழ்ந்து வருவது

40. புவிவெப்பமடைதல் மனிதன் உருவாக்கிய சிக்கலே என்று கூறியவர்
அ) டேவிட் கிங் ஆ)டேவிட் சிங்
இ) டேனியல் சிங் ஈ)டேனியல் கிங்

41. நடுவண் அரசு பேரிடர் மேலாண்மை ஆணையத்தை உருவாக்கிய ஆண்டு
அ) 2005 டிசம்பர் 23 ஆ) 2006 டிசம்பர் 23
இ) 2005 டிசம்பர் 22 இ)2006 டிசம்பர் 22

42. அழகியலை உருவாக்கத் தளம் அமைத்துத் தந்த நூல் எது?
அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம்
இ} புறநானூறு ஈ) நற்றிணை

43. வரலாறு முழுக்க மனித நாக்குகளால் ஈரம் பட்டுக் கிடப்பது
அ) இசை ஆ) தண்ணீர் இ) எச்சில் ஈ) மொழி

IX. **பின்வரும் பலவுள் தெரிவுசெய் (துணைப்பாட ) வினாக்களுக்கு விடை எழுதுக**
**(எவையேனும் ஐந்து மட்டும்)** 5x1=5

44. நாம் வலிமை பெறுவதற்கான வழி என்று பாரதியார் கூறுவது எது?

அ) நெஞ்சம் உருகி உதவுவது
ஆ) அறிவில் சுடர் ஏற்றுவது
இ) மெலியாருக்கு இரங்கி அவர்களை நமக்கு நிகராகச் செய்வது
ஈ) பிற மொழி கற்பது

45. பரலி.சு. நெல்லையப்பருக்குப் பாரதியார் கடிதம் எழுதிய தேதியும் ஆண்டும்-----------

அ) 16 ஜூலை 1915 ஆ) 19 ஜூலை 1915
இ) 15 ஜூலை 1916 இ) 16 ஜூலை 1919

46. ”ஆணும் பெண்ணும் ஓர் உயிரின் இரண்டு ------------- என்று எழுது “ எனக் கடிதம் வரைந்தார் பாரதியார்.
அ) கண்கள் ஆ) கைகள்
இ ) தலைகள் ஈ) கால்கள்.

47. பயிர்கள் மூழ்காமல் மொத்த கிராமமும் தப்பித்துக் கொள்ள மருதன் கண்டுபிடித்த வழி

அ ) வடிகால் மதகைத் திறந்து விடுவது
ஆ) மண்டிக்கிடக்கும் பேய்ச்செடிகளை அரித்து எறிவது
இ) வரப்புகளை உயர்த்திக் கட்டுவது
ஈ) மூன்று மைல் நீள வாய்க்காலைச் சுவர் வைத்துத் தடுப்பது

48. ”நட்டது பாழாய்ப் போகிறதே” என்று கன்னத்தில் கை வைத்த மருதனுக்குச் சொந்தமாக இருந்த நிலத்தின் அளவு
அ) 60 வேலி நிலம் இருந்தது
ஆ) 20 வேலி நிலம் இருந்தது
இ) 100 குழி நிலம் இருந்தது
ஈ) ஒரு சக்கரைக் குழி நிலம் கூட இல்லை

49. தமிழில் ஏறிக்கொண்டே போக வேண்டியதாகப் பாரதி கூறுவது

அ)புதியநடை ஆ)புதிய இசை
இ) புதிய அழகு ஈ) புதிய உண்மை

50. முதல்கல் சிறுகதையில் குறிப்பிடப்படும் ஆற்றின் பெயர் என்ன?

அ) காவிரி ஆ) வைகை இ) வளவனாறு ஈ)மணிமுத்தாறு